MC.No. 21/2022
Dt. 29.09.2025
ம.சா.1 – சூர்யா

**<u>எதிர் மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு மீண்டும் சாட்சி 1 அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

2,3 ம் மனுதாரர்கள் எந்த வகுப்பில், எந்த பள்ளியில் படிக்கிறார்கள் என்றால் எனது மகள் கிருபாஷினி 7 ம் வகுப்பு அரசு பள்ளியிலும், மகன் ரித்திஷ்குமார் தனியார் பள்ளியிலும் செயின் ஜான்ஸ் பள்ளியிலும் படிக்கிறார்கள். தற்போது நான் யாருடன் வசிக்கிறேன் என்றால் எனது பெற்றோர்களுடன் வசிக்கிறேன். எனது அப்பா என்ன வேலை செய்கிறார் என்றால் செக்கியூரிட்டி வேலை செய்கிறார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் எதுவும் செய்யவில்லை. எனது தந்தையின் மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.18,000/– ஆகும். எனது தம்பியும் எங்களுடன் தான் வசிக்கிறார். நானும் எனது குழந்தைகளும் எனது அப்பா மற்றும் தம்பியின் பராமரிப்பில் மட்டுமே உள்ளோம் என்றால் சரிதான். எனது தம்பி அழகுராஜா என்ன வேலை செய்கிறார் என்றால் ஓட்டுனராக இருக்கிறார். எனது குழந்தைகளை தற்போது சரியாக கவனிக்க முடியுமா என்றால் எனது பெற்றோர் மற்றும் தம்பி பார்த்துக்கொள்கிறார்கள். வேப்பம்பட்டில் புது வீடு எதிர் மனுதாரர் கட்டி முடித்து புதுமனை விழாவிற்கு என்னை அழைத்தாரா என்றால் இல்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் 2015 டிசம்பரில் அந்த விழாவிற்கு எனக்கு அழைப்பு விடுத்தும் நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. எப்போது அந்த வீடு கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்றால் அக்டோபர் 2015 ல் கட்ட ஆரம்பித்தார். வீடு கட்ட ஆரம்பித்தபோது நான் அவருடன் வசித்தேன் என்றால் சரிதான். 2015 ல் எந்த மாதத்தில்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் நினைவில்லை. ஜுன் 2015 ல் நான் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் நினைவில்லை.

எனது கணவர் விவாகரத்து பெற்ற விவரம் தெரியுமா என்றால் தற்போது தெரிந்து கொண்டேன். 05.01.2016 ம் தேதியில் விவாகரத்து நோட்டீஸ் எனக்கு அனுப்பியுள்ளார் என்றாலும் அதனை பெற்றுக்கொண்டிருக்கிறேன் என்றால் இல்லை. என்னுடன் வசிக்கும்போதே அவர் வழக்கறிஞரை பார்த்து நோட்டீஸ் அனுப்பியுள்ளார். விவாகரத்து வழக்கில் நோட்டீஸ் பெற்றுக்கொண்டு வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருந்ததால் அதனை நடத்தாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. என் 2 வது குழந்தை எப்போது பிறந்தது என்றால் 15.06.2016 ல் பிறந்தது. ஏப்ரல் 2015 ல் நான் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டதால் 2 வது குழந்தை கணவர் மூலமாக பிறக்கவில்லை என்றால் சரியல்ல. அதன் மருத்துவ பரிசோதனைக்கு அவரும் உடனிருந்தார். நான் வேலை செய்கிறேனா என்று என்னுடைய சொத்து விவர பட்டியலில் விளக்கம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் 3 வருட வங்கி கணக்கு விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் அது தேவையில்லை. அதில் எனக்கு சம்பளம் வருவதால் அதனை மறைத்து தாக்கல் செய்யாமல் விட்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து மற்றொரு நபருடன் வாழ்ந்து வருவதால் ஜுவனாம்சம் பெற எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA